<u>அவசர கூட்டப்பொருள்</u>

1. அரசு ஆணை எண்.41, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.28.02.2021-ன் படி நாகர்கோவில் நகராட்சி 01.03.2019 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. சிறப்பு நிலை நகராட்சியாக இருந்த போது உள்ள 49.10 சதுரகிலோ மீட்டர், பரப்பளவு இடத்தினையே தற்போது மாநகராட்சியின் மொத்த பரப்பளவாகவும் கொண்டுள்ளது. தற்போது நாகர்கோவில் மாநகராட்சியின் எல்கையினை விரிவாக்கம் செய்யும் நேர்வில் கீழ்கண்ட பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளை மாநகராட்சியுடன் இணைக்க தேர்வு செய்யப்பட்டுள்ளது.

1. தெங்கம்புதுார் பேரூராட்சி
2. புத்தேரி ஊராட்சி
3. பீமநகரி ஊராட்சி
4. திருப்பதிசாரம் ஊராட்சி
5. தேரேகால்புதுார் ஊராட்சி
6. மேல சங்கரன்குழி ஊராட்சி

மேற்படி பேரூராட்சி மற்றும் ஊராட்சிகள் மாநகராட்சியின் எல்கையை ஒட்டி அமைந்து 28.68 சதுர கிலோமீட்டர் பரப்பளவை கொண்டதுமாகும். இம்மாநகராட்சி எல்கையினை ஒட்டியுள்ள வளர்ந்து வரும் இப்பகுதிகள் திட்டமில்லாத வளர்ச்சி பெற்றுள்ள நிலையில் இவற்றை நாகர்கோவில் மாநகராட்சியுடன் இணைத்தால் திட்டமிட்ட வளர்ச்சிக்கு உதவும் என்பதாலும் ஒருங்கிணைந்த இப்பகுதியில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தவும், அவற்றிற்கான நிதி ஆதாரங்களை தேசிய அளவில் பல்வேறு நிதி ஆதாரங்களிலிருந்து பெற ஏதுவாக சூழல் ஏற்படும்.

கட்டுப்பாடற்ற இப்பகுதியின் வளர்ச்சியை சரியான திட்டமிடல் மூலம் இணைக்கப்படவுள்ள உள்ளாட்சிகளின் சரியாக பயன்படுத்தும் நிலையின் மூலம் இப்பகுதிகளுக்கு அடுத்தாற்போல் அமைந்துள்ள ஊராட்சிகளின் நிலப்பகுதிகளை சாகுபடி நிலங்கள் மற்றும் நீர்நிலை ஆதாரங்களை சேதமின்றி பாதுகாக்க இயலும் என்ற நோக்கிலும் மேற்குறிப்பிட்ட உள்ளாட்சிகளை நாகர்கோவில் மாநகராட்சியுடன் இணைத்து மாநகராட்சி எல்லையை விரிவாக்கம் செய்யவும், மேற்படி எல்லை விரிவாக்கத்திற்கு இசைவு அளிக்கக்கோரும் கருத்துருவினை அரசுக்கு மேலனுப்பி வைக்கவும், மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு: -** அங்கீகரிக்கப்பட்டது

கோப்பு எண்.7879/2021/எப்1

**தீர்மானம் எண்.251 - அங்கீகரிக்கப்பட்டது.**